Deposition of witness
(Chapter XXIII Code of Criminal Procedure
District Munsif cum Judicial Magistrate Court, Alangudi.
CC No. 66 /2024

## Deposition of P.W.1

| | | |
|---|---|---|
| Name | : | கண்ணம்மாள் |
| Husband’s Name | : | ரெங்கசாமி |
| Village | : | செட்டியாப்பட்டி |
| Age | : | **60/2025** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 07.01.2025**
(1, 2, 3, 4 எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர்.)

<u>**முதல்விசாரணை**</u>

நான் செட்டியாப்பட்டி கிராமத்தில் வசித்து இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் நால்வரையும் எனக்கு தெரியும். எனக்கு எழுதபடிக்க தெரியாது. கையொப்பம் மட்டும் செய்வேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். சுமார் ஒரு வருடத்திற்கு மேல் இருக்கும். தேதி மாதம் ஞாபகம் இல்லை. ஒருநாள் காலை சுமார் **7.00** மணியளவில் நான், எனது மகள்கள் செல்வி, ஜெயந்தி ஆகியோருடன் வீட்டில் இருந்தபோது எதிரிகள் மாரிமுத்து, அஞ்சலை, முத்துசாமி, கலையரசி ஆகியோர் அங்கு வந்து எங்கள் வீட்டின் அருகில் இருந்த பழுத்த வாழை மரத்தை வெட்டினார்கள். நான் அதனை பார்த்து எனது மகள்களிடம் எதிரிகள் வெட்டுவதை செல்போனில் வீடியோ எடுங்கள் என்று சொன்னேன். அதனால் எதிரி மாரிமுத்து செல்போனை பிடிங்கிக்கொண்டு அதை உடைத்துவிட்டார்கள். என்னை எதிரி முத்துசாமி விரட்டிக்கொண்டு சென்று கம்பால் என்னை மார்பில் குத்தி, கன்னத்தில் அறைந்தார். அப்போது அங்கு வந்த எனது கணவர் ரெங்கசாமியை எதிரி கலையரசி வேர்க்கட்டையை எடுத்து என் கணவர் மீது வீசியதில் அவரது வலது முழங்கையில் அடிப்பட்டுவிட்டது. என் பெரிய மகள் செல்வியை எதிரி மாரிமுத்து ஆரஸ்பதி கட்டையால் வலது தொடையில் அடித்து கன்றிப்போய்விட்டது. எதிரி அஞ்சலை எனது மகள் செல்வியின் தலைமுடியை பிடித்து ஆரஸ்பதி கம்பால் அடித்துவிட்டார். அதில் செல்வியின் கழுத்தில் காயம் ஏற்பட்டுவிட்டது. என் மகள் ஜெயந்தி தடுத்தபோது எதிரி அஞ்சலை கட்டை கம்பால் வலது முழங்கையில் அடித்து காயம் ஏற்படுத்திவிட்டார். எதிரி மாரிமுத்து தேவடியா புண்ட மகளே என்று எங்களை அசிங்கமாக திட்டினார். பின்னர் நான் காவல்நிலையம் சென்று புகார் அளித்துவிட்டு புதுக்கோட்டை மருத்துவகல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன். என்னுடன் என் கணவர் ரெங்கசாமி மற்றும் என்

மகள் செல்வி ஆகியோர் சிகிச்சைக்கு சேர்ந்தார்கள். காயமடைந்த மற்றொரு மகளான ஜெயந்தி குழந்தை வைத்திருப்பதால் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேரவில்லை. சாட்சியால் அளிக்கப்பட்ட புகார் மனு அ.சா.ஆ.1ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தனர். நடந்த விபரம் கூறினேன்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

2வது எதிரி முத்துசாமி எனது கணவரின் உடன்பிறந்த அண்ணன் ஆவார். எங்களுக்கும், எதிரிகள் தரப்பிரனருக்கும் ஏற்கனவே இடப்பிரச்சனை சம்பந்தமாக மனவருத்தம் இருந்து வந்தது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் எதிரிகளின் காம்பவுண்ட் சுவற்றிற்குள் என்றால் சரிதான். எங்களை பிடித்து உள்ளே இழுத்து சென்றுவிட்டனர். என்னை போலிசார் விசாரணை செய்தார்கள். போலிசார் என்னை விசாரிக்கும்போது எதிரிகள் எங்களை பிடித்து காம்பவுண்ட்டிற்குள் இழுத்து சென்றார்கள் என்ற விவரத்தை சொல்லியுள்ளேன். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தை சுற்றி ஆட்கள் நிறைய இருந்தார்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தின் அருகே ரெங்கசாமி என்பவரின் வீடு உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திலிருந்து மருத்துவமனைக்கு எவ்வளவு நேரத்தில் சென்றோம் என்றால் ஒருமணிநேரத்தில் சொன்றோம்.

2) நாங்கள் மருத்துவமனையில் இருந்தபோது போலிசார் எவ்வளவு நாட்கள் சென்று எங்களை விசாரித்தார்கள் என்றால் சம்பவம் நடந்து 3 நாட்கள் கழித்து வந்து விசாரித்தார்கள். போலிசார் என்னை விசாரித்து கையொப்பம் வாங்கிக்கொண்டார்கள் என்றால் சரிதான். செல்போனையும் வாங்கிக்கொண்டு எனது மகள்களையும் விசாரித்தார்கள். அ.சா.ஆ.1 புகார் மனுவில் கையொப்பம் செய்தது நான்தான். அதில் உள்ள விவரங்களை எனது மகள் ஜெயந்திதான் சொன்னார். சம்பவம் நடந்த நாளிலிருந்து எத்தனை நாட்கள் மருத்துவமனையில் இருந்தேன் என்றால் 20 நாட்கள் இருந்தேன். என்னை மருத்துவர் விசாரிக்கும்போது முதல்விசாரணையில் எனக்கு ஏற்பட்டதாக சொல்லியுள்ள காயங்களைத்தான் மருத்துவரிடமும் தெரிவித்தேன். மருத்துவரிடம் எப்போது மேற்படி விவரங்களை சொன்னேன் என்றால் மருத்துவமனைக்கு சேர்ந்த அன்று தெரிவித்தேன். எதிரிகள் தரப்பினரை நாங்களும் தாக்கியதாக எங்கள் மீதும் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான்.

3) நான் முதல்விசாரணையில் சொன்ன விவரங்களைத்தான் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். நான் முதல்விசாரணையில் சொல்லியுள்ளதுபோல் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நாங்கள்தான் எதிரிகளை கெட்டவார்த்தையால்

பேசி தாக்கினோம் என்றாலும், எதிரிகள் தரப்பில் கொடுத்த புகாரிலிருந்து தப்புவதற்காக எதிரிகள் மீது நாங்கள் பொய்யான புகார் அளித்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எங்களுக்கு ஏற்பட்ட காயத்திற்கும் எதிரிகளுக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. நான் முதல்விசாரணையில் சொல்லியுள்ளதுபோல் எதிரிகள் எங்களை கெட்ட வார்த்தையால் பேசி தாக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி மாரிமுத்து செல்போனை பிடிங்கி உடைக்கவில்லை என்றால் சரியல்ல. 2வது எதிரி முத்துசாமி என்னை கம்பால் மார்பில் குத்தி கண்ணத்தில் அறையவில்லை என்றாலம, 4வது எதிரி கலையரசி எனது கணவர் ரெங்கசாமி என்பவரை வேர்கட்டையால் தாக்கவில்லை என்றும், 1வது எதிரி மாரிமுத்து எனது மகள் செல்வியை கட்டையால் வலது தொடையில் தாக்கவில்லை என்றும், 3வது எதிரி அஞ்சலை எனது மகள் செல்வியின் தலைமுடியை இழுத்து ஜெயந்தி என்பவரை தாக்கியதாக வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.  எனது கணவர் ரெங்கசாமியை போலிசார் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான்.

<u>ம.வி.இல்லை</u>